*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*14 11 2025        FRIDAY 6.30 PM*
*வணக்கம் - மாநிலச் செய்திகள்*

***தலைப்புச் செய்திகள்***

*1) பீகார் சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி அமோக வெற்றி பெற்றுள்ளது.*

****நல்லாட்சி, வளர்ச்சி மற்றும் சமூகநீதிக்கு கிடைத்த வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி இது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்*

*2) கல்வித்துறையின் வளர்ச்சிக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.*

*3) வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை நிறுத்த வேண்டும் என்ற நோக்கில் திமுக செயல்படுவதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.*

*4) ஆசிய வில்வித்தை சாம்பியன் போட்டியில், இந்தியா இரண்டு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.*

*>>>><<<<>>>><<<<*

*பீகார் சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி அமோக வெற்றி பெற்றுள்ளது.*

*243 உறுப்பினர்களைக் கொண்ட பீகார் சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில், தேசிய ஜனநாயக கூட்டணி 77 தொகுதிகளில் வெற்றிபெற்று, 121 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது.*

*பிஜேபி 45 தொகுதிகளில் வெற்றிபெற்று, 46 தொகுதிகளிலும், ஐக்கிய ஜனதா தளம் 28 தொகுதிகளில் வெற்றி பெற்று 55 தொகுதிகளிலும் முன்னிலை பெற்றுள்ளது.*

*தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றுள்ள LJP மூன்று தொகுதிகளில் வெற்றிபெற்று 16 தொகுதிகளிலும், இந்துஸ்தானி அவாம் மோர்ச்சா ஒரு தொகுதியில் வெற்றிபெற்று 4 தொகுதிகளிலும் முன்னிலை வகிக்கிறது*

*இந்த தேர்தலில் ராஷ்ட்ரிய ஜனதா தளம் தலைமையிலான எதிர்க்கட்சிகளின் கூட்டணி பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது.*

*ராஷ்ட்ரிய ஜனதா தளம் 6 தொகுதிகளில் வெற்றிபெற்று, 19 தொகுதிகளில் மட்டுமே முன்னிலை வகிக்கிறது. காங்கிரஸ் ஒரு தொகுதியில் வெற்றிபெற்று 5 தொகுதிகளில் மட்டுமே முன்னிலை பெற்றுள்ளது.*

*இந்த தேர்தல் வெற்றியை, பிஜேபி மற்றும் ஐக்கிய ஜனதா தளம் கட்சியினர் கொண்டாடி வருகின்றனர்.*

*பாட்னாவில் அக்கட்சிகளின் தலைமையகங்களில் இனிப்புகள் வழங்கியும், வாத்தியங்களை இசைத்தும் அவர்கள் வெற்றியை கொண்டாடி வருகின்றனர்.*

*(சவுண்ட் பைட்-இசைக்கருவிகள் 20 செகண்ட்ஸ்)*

*>>>><<<<>>>><<<<*

*பீகார் சட்டப்பேரவை தேர்தல் வெற்றி, நல்லாட்சி, வளர்ச்சி மற்றும் சமூகநீதிக்கு கிடைத்த வெற்றி என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

*சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த வெற்றி, பீகாரின் வளர்ச்சிக்காக கூடுதல் உத்வேகத்துடன் பணியாற்றுவதற்கான சக்தியை அளித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.*

*>>>><<<<>>>><<<<*

பீகார் சட்டப்பேரவை தேர்தலில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கு கிடைத்த வெற்றி வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், எதிர்க்கட்சிகளின் கூட்டணியை மக்கள் முற்றிலுமாக புறக்கணித்திருப்பதை தேர்தல் முடிவுகள் உணர்த்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, பீகார் வளர்ச்சிக்காக மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மக்கள் முழுஆதரவு அளித்துள்ளதே இந்த வெற்றிக்கு காரணம் என்றும் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

>>>><<<<>>>><<<<

பீகார் சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு மிகப் பெரிய வெற்றி கிடைத்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

சேலம் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இது வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று குறிப்பிட்டார்.

உண்மையான வாக்காளர்கள் தேர்தலில் பங்கேற்க வேண்டும் என்ற நோக்கில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இந்த தேர்தல் வெற்றி உண்மையான வாக்காளர்கள் மட்டுமே வாக்காளர் பட்டியலில் இடம்பெற வேண்டும் என்பதே மக்களின் விருப்பம் என்பரா உணர்த்தியிருப்பதாக அவர் கூறினார்.

வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை எப்படியாவது நிறுத்த வேண்டும் என்ற நோக்கில் திமுக செயல்படுவதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டினார்.

>>>><<<<>>>><<<<

மேகதாதுவில் கர்நாடக அரசு அணை கட்டுவதற்கு மேற்கொள்ளும் முயற்சியை தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், காவிரி நீர் விவகாரத்தில் தமிழக அரசு கவனமாகவும், துரிதமாகவும் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>><<<<>>>><<<<

கல்வித்துறையின் வளர்ச்சிக்கு திமுக அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக மாநில அமைச்சர் திரு. கே.என். நேரு கூறியுள்ளார்.

இன்று திருச்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாணவர்களுக்கு விலையில்லா மிதி வண்டிகளை வழங்கி அவர் பேசினார்.

அஇஅதிமுக கொண்டு வந்த இந்த திட்டத்தை திமுக அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

பள்ளிக்கல்வித் துறைக்கு 39 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>><<<<>>>><<<<

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் அருகே, இந்திய விமானப்படையின் பயிற்சி விமானம் விபத்துக்குள்ளானது.

தொழில்நுட்ப கோளாறு காரணமாக விமானம் கட்டுப்பாட்டை இழந்ததை அடுத்து, இரண்டு விமானிகளும் பாராசூட் மூலம் தரையிறங்கியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் – சுரேகா 32 செகண்ட்ஸ்)*

*>>>><<<<<>>>><<<<*

***தேனி, தென்காசி. திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.***

***எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.***

*(சவுண்ட் பைட்-செந்தாமரை 30 செகண்ட்ஸ்)*

*>>>><<<<<>>>><<<<*

***<u>மாவட்டச் செய்திகள்</u>***

***அரியலூர் மாவட்டத்தில் மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டத்தை போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சிவசங்கர் இன்று தொடங்கி வைத்தார்.***

*>>>><<<<<>>>><<<<*

***திருப்பத்தூர் மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டுறவு வார விழா நிகழ்ச்சியில் பங்கேற்ற மாநில அமைச்சர் திரு. எ.வ. வேலு, அரசின் நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.***

*>>>><<<<<>>>><<<<*

***மதுரை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளை ஆட்சியர் திரு. பிரவின் குமார் உச்சப்பட்டி மற்றும் மறவன்குளத்தில் இன்று ஆய்வு செய்தார்.***

*>>>><<<<<>>>><<<<*

***பெரம்பலூர் மாவட்டத்தில் கல்லூரி மாணவர்கள் பங்கேற்ற குழந்தைகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.***

*>>>><<<<<>>>><<<<*

***திண்டுக்கல் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் குறித்த விழிப்புணர்வு மனிதச் சங்கிலி இன்று நடைபெற்றது.***

*>>>><<<<<>>>><<<<*

***ராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டார விவசாயிகள் சம்பா பருவ நெற்பயிர்களுக்கு காப்பீடு செய்ய நாளை கடைசி நாளாகும் என்று வேளாண் துறை கூறியுள்ளது.***

*>>>><<<<<>>>><<<<*

***திருவாரூர் மாவட்டத்தில் குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமை தடுப்பு குறித்த விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு. மோகனசந்திரன் இன்று தொடங்கி வைத்தார்.***

*>>>><<<<<>>>><<<<*

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

***ஆசிய வில்வித்தை சாம்பியன் போட்டியில், இந்தியா இரண்டு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.***

***டாக்காவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில், Ankita Bhakat கொரியாவின் Namsu Hyeon-வை வென்று தங்கப்பதக்கத்தை கைப்பற்றினார்.***

***ஆடவர் ஒற்றையர் பிரிவில் Dheeraj Bommadevara தங்கப்பதக்கத்தையும், ராகுல் வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.***

*மற்றொரு மகளிர் ஒற்றையர் பிரிவில் சங்கீதாவுக்கு வெண்கலப்பதக்கம் கிடைத்தது.*
*இப்போட்டியில் இந்தியா இதுவரை 6 தங்கம், 3 வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கத்துடன் பதக்கப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.*

*>>>><<<<>>>><<<<*

*Bondi ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியில், இந்தியாவின் Rathika Seelan பட்டம் வென்றார்.*

*ஆஸ்திரேலியாவின் சிட்னியில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 11-7, 11-6, 11-7 என்ற செட்கணக்கில் நியூஸிலாந்தின் Maiden Lee Coe-ஐ வென்றார்.*

*>>>><<<<>>>><<<<*

*உலக கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.*

*ரோஹித் தலைமையிலான இந்த அணியில் 18 பேர் இடம்பெற்றுள்ளனர்.*

*இப்போட்டி, சென்னை மற்றும் மதுரையில் வரும் 28ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் 10ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.*

*>>>><<<<>>>><<<<*

*உலக துப்பாக்கி சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Esha Singh வெண்கலப்பதக்கம் வென்றார்.*

*எகிப்தின் கெய்ரோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின், மகளிர் 25 மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

*இப்போட்டியில் இந்தியா இதுவரை 3 தங்கம், 5 வெள்ளி, 4 வெண்கலப்பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் 3வது இடத்தில் உள்ளது.*

*>>>><<<<>>>><<<<*

*தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல்நாள் ஆட்ட நேர இறுதியில் இந்தியா முதல் இன்னிங்ஸில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 37 ரன் எடுத்துள்ளது.*

*கொல்கத்தாவில் இன்று தொடங்கிய இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த தென்னாப்பிரிக்கா, அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து, முதல் இன்னிங்ஸில் 159 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.*

*அதிகபட்சமாக Aiden Markran 31 ரன் எடுத்தார்.*

*பும்ரா அபாரமாக பந்துவீசி, 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.*

*>>>><<<<>>>><<<<*

*வளரும் வீரர்களுக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி இன்று தோஹாவில் தொடங்கியது.*
*தற்போது இந்தியா-ஏ அணி - ஐக்கிய அரபு எமிரேட்டை எதிர்த்து ஆடிவருகிறது.*

*>>>><<<<>>>><<<<*